The Morning Star

A Christian Publication

உதயதாரகை

Established 1841

Subscription Rs.100/=
(postage Separate)

The Morning Star
CACM Head Office
Christian Theological Seminary
Maruthanarmadam
Chunnakam
Sri Lanka.

Righteousness Exalteth A Nation. But Sin is a Reproach to any people.

Email: themorningstar1841@gmail.com - Vol. 183 - Jaffna - Friday, 15th March 2024 - No. 01 - Web: www.cacmchurch.com

வாழும் கடவுளுக்காக வாழுவோம்

கல்லறையொன்று கருவறையானது

திருச்சபைத் தலைவருடைய உயிர்ப்பின் செய்தி

உலகத்தில் உயிரினங்கள் தோன்றுவதும் மறைவதும் இயற்கையானதே. இதற்கு மனுக்குலமும் விதிவிலக்கானது அல்ல. மரணம் உலக உயிரினங்களின் முடிவு. அதற்கு கற்றோர் கல்லாதோர், ஏழை பணக்காரர், வலியோர் நலிவுற்றோர் என்ற எந்தவிதமான வேறுபாடுகளும் கிடையாது. மண்ணுலகில் நடமாடிய மன்னுயிர்கள் மண்ணுக்குள் மறைந்து போனாலும் அவர்களுடைய மண்ணுலக வாழ்வை மறக்காமல் நினைவுகூருவதற்கு அமைக்கப்பட்டவைகளே கல்லறைகள். உலகில் அமைக்கப்படும் பல்லாயிரக்கணக்கான கல்லறைகள் குறிப்பிட்ட காலத்திற்கு பல்லாயிரக்கணக்கான கதைகளைக் கூறினாலும் கால நீரோட்டத்தில் அவைகள் அழிந்து போவதைனையே வரலாறுகள் பதிவு செய்துள்ளன.

தவக்காலத்தின் நிறைவிலே வந்துள்ள நாம் ஆண்டவர் இயேசுவினுடைய பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல் போன்றவற்றை நினைவு கூர அழைக்கப்பட்டிருக்கிறோம். பிறப்பு, இறப்பு இவை இரண்டினையும் உலக மக்கள்

(03ஆம் பக்கம் பார்க்க)

வரலாற்றில் பதிவான

அருட்பொழிவு வழிபாடு

கடந்த நவம்பர் மாதம் 25ம் திகதி மாலை 02:30 மணிக்கு சி.ஏ.சி.எம் திருச்சபையில் பணியாற்றி வரும் ஐந்து இளம் அருட்பணியாளர்கள் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களால் குருமாராக அருட்பொழிவினைப் பெற்றுக் கொண்டனர்.

அமெரிக்கன் மிசன் தொண்டர்களுடைய முதலாவது பணிக்களமான தெல்லிப்பளையில் போர்த்துக்கேயரால் கட்டப்பட்டு ஒல்லாந்தரால் மீளுருவாக்கப்பட்டு, இறுதியில் 2016 இல் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையினரால் புனரமைப்புச் செய்யப்பட்ட அழகிய தேவாலயத்தில் ஆலயம் நிறைந்த மக்கள் கூட்டத்தின் நடுவில் இவ் அருட்பொழிவு வழிபாடு சிறப்பாக நடைபெற்றது.

இவ் வழிபாட்டில் காரைநகர் திருச்சபையில் பணியாற்றிவரும் **அருட்பணி. சுதாஜினி சுதாகர்** அவர்களும் கல்மடு, மறவன்குளம் திருச்சபையில் பணியாற்றிவரும் **அருட்பணி. கலாவதி பிரதீபன்** அவர்களும் சமாதானபுரம் திருச்சபையில் பணியாற்றிவரும் **அருட்பணி. தங்கதுரை சுசேந்தன்** அவர்களும் கித்துள், தும்பளாஞ்சோலை திருச்சபையில் பணியாற்றிவரும் **அருட்பணி. சின்னதம்பி டானியல் செல்வகுமார்** அவர்களும் முறக்கொட்டாஞ்சேனை திருச்சபையில் பணியாற்றிவரும் **அருட்பணி. பியூரா செல்வகுமார்** அவர்களும் அருட்பொழிவினைப் பெற்றுக் கொண்டனர்.

207 ஆண்டு வரலாறு கொண்ட இத்திருச்சபையில் மூன்று பெண்கள் ஒரே நாளில் அருட்பொழிவினைப் பெற்றுக் கொண்டனர் என்பதும் இவர்களில் இருவர் பெண் தலைமைத்துவக் குடும்பங்களினைத் தாங்கி வழிநடத்துவர்கள் என்பதும் மேலும் இருவர் கணவன் மனைவியாக இறைபணியாற்றுபவர்கள் என்பதும் வரலாற்றில் பதியப்படும் பெருமைதரும் விடயங்களாகும். இவர்கள் அனைவரும் நான்கு வருடங்கள் மருதனார்மடம் இறையியல் கல்லூரி,

(12ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்நாடு இறையியற் கல்லூரியினரின் இலங்கை விஜயம்

05.01.2024 அன்று தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் இருந்து அதன் அதிபர் அருட் கலாநிதி மார்க்கிரட் கலைச்செல்வி அவர்களின் தலைமையில் பதினொரு (11) விரிவுரையாளர்கள் மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரிக்கு வருகை தந்தார்கள். மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரிக்கும், தமிழ்நாடு இறையியல் கல்லூரிக்கும் நீண்ட காலத் தொடர்பு இருப்பதன் அடிப்படையில் அத்தொடர்பை மீண்டும் வலுப்படுத்தும் வகையில் புதிய பல திட்டங்களை செயற்படுத்துவதற்கான,

கலந்துரையாடலுக்காக இவர்கள் வருகை தந்திருந்தார்கள். இதில் குறிப்பாக மாணவர்களின்

(05ஆம் பக்கம் பார்க்க)

ஞாயிறு பாடசாலை ஆசிரியர்

செயலமர்வு

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் சமயக் கல்விக் குழு, இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்துடன் இணைந்து ஒழுங்கு செய்த ஞாயிறு பாடசாலை ஆசிரியர்களிற்கான செயலமர்வு ஜனவரி மாதம் 22,23 திகதிகளில் மருதனார்மடம் கிறிஸ்தவ

(05ஆம் பக்கம் பார்க்க)

இறையியற் கல்லூரிகளின் ஐக்கியம்

18.01.2024 அன்று ஒன்றிப்பு வாரத்தினை மையமாகக் கொண்டு சென். சேவியர் கத்தோலிக்க இறையியல் கல்லூரியும், மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியும் இணைந்து கருத்தரங்கினையும், அனுபவப் பகிர்வினையும் மேற்கொண்டன. சென். சேவியர் இறையியல் கல்லூரியின் விரிவுரையாளர்களும், மாணவர்களும் மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரிக்கு வருகை தந்து கல்லூரியின் மாணவர்களுடனும், விரிவுரை

(05ஆம் பக்கம் பார்க்க)

இறையியல் கருத்தரங்கு

06.02.2024 - 09.02.2024 வரை நடைமுறை சார் இறையியல் கருத்தரங்கும், அத்தோடு தற்காலத்தில் காணப்படுகின்ற சூழமைவுக்கு ஏற்றாற்போல் இறையியல் கல்வியானது எந்த வகையில் வடிவமைக்கப்பட வேண்டும் என்கின்ற தலைப்புகளின் கீழ் இறையியல் கற்கைநெறி நடைபெற்றது. இக்கற்கை நெறியானது மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியினால் ஒழுங்குபடுத்தப்

(05ஆம் பக்கம் பார்க்க)

HAPPY
INTERNATIONAL
WOMEN'S
DAY
MARCH 08

கிருபை பெற்றவளே, வாழ்க,
கர்த்தர் உன்னுடனே இருக்கிறார்.
லூக்கா 01:28

ஆசிரியர் பேனாமுனையில்...

மரண பயம் மரணிக்கட்டும் !!!!

If anyone would come after me, let him deny himself and take up his cross daily and follow me

தபசு நாட்களைக் கடந்து தூய வாரத்துக்குள் பிரவேசிக்க உள்ளோம். தபசு நாட்கள் என்பது நம்மில் பலர் எண்ணுவதுபோல், கவலையின் நாட்களல்ல, அக்காலத்திலே கூடுதலாக இறையருளை நாடிநின்று, அதன் பின் தனது தூய மரணத்தால் மரணத்தை வென்ற உன்னதரைக் குதுாகலத்துடன் உணர்ந்து பார்க்க ஆயத்தமாகும் நாட்களே இவை. அப்போஸ்தலர் நடபடிகள் 2:24 பின்வருமாறு கூறுகிறது "அவர் மரணத்தால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது". நாம் மே மாதத்தில் கொண்டாடி மகிழவிருக்கிற பெந்தேகோஸ்தே நாளில் பேதுரு செய்த மேற்கண்ட அருளுரை நிகரற்றது. ஆண்டவருக்கு மரணமே கூடாது என்று கடிந்து கொண்ட பேதுரு, அவர் அகப்பட்டுக் கொண்டதைக் கண்டு மறுதலித்த பேதுரு, அவரது மரணத்தின் அவசியத்தையும், அதனது இரகசியத்தையும் எடுத்துரைத்தமையானது தூய ஆவியானவரின் செயலே.

மரணம் என்பது கொடியதான ஒரு சத்துரு என்றே பலரும் சொல்வர். மரணத்துக்கு பயப்படாதவர்கள் யாருமில்லை. எல்லா மனிதரும் மரணத்தை வெறுப்பதற்கு காரணமென்ன? மறுமையைப்பற்றிய நிச்சயமுள்ள விசுவாசிகளும்கூட, மரணத்துக்குப் பயப்படுவதன் காரணமென்ன? அறிந்த இடத்தை விட்டு அறியாத இடம் போவதும், அருமையானவர்களையும், இனத்தவர்களையும், நண்பர்களையும், வீடுவாசல்கள், சொத்துக்கள் என்பனவற்றை விட்டுப் பிரிவதும் எமக்குத் துக்கமானவையாக உணரப்படுகின்றன. நமது எண்ணங்கள், ஒழுங்குகள், தீர்மானங்கள் நடந்தேறாதபடி மரணம் பல வேளைகளில் தடுக்கிறது. நமது வேலைகள், சம்பாத்தியங்கள், குடும்பப் பராமரிப்பு என்பனவற்றை மரணம் நாசமாக்கி விடுகிறது எனும் உணர்வு எமக்கு ஏற்படுவதுண்டு. சுகவீனம் ஏற்பட்டால் எம்மால் இயன்ற மட்டும் எமது உயிரைக் காத்துக்கொள்ள எமது பணத்தை வாரி இறைக்கிறோம். எவ்வளவோ துன்பங்களை அனுபவிப்பவர்கள்கூட மரணத்தை எண்ணி அஞ்சுகிறார்கள். இவ்வாறான கொடிய மரணத்தை நமதாண்டவர் விரும்பி ஏற்றுக் கொண்டார் என்பது விந்தை அல்லவா?

மரணத்தைப் பரிகரிக்க எவராலும் முடியாது. பாவத்துக்குரிய மனிதன் மரணத்துக்கு உரியவனாயுள்ளான். மரணம் இவனை விழுங்குமேயன்றி மரணத்தை இவன் மேற்கொள்வதில்லை. மரணம் இவனைப் பரிகரிக்குமேயன்றி இவன் மரணத்தைப் பரிகரிப்பதில்லை. ஒரே மனிதன் உண்டு. அவர் நாசரேத்தூர் இயேசு. "அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும், அழியாமையையும் சுவிசேசத்தினால் வெளியரங்கமாக்கினார். (2தீமோ 1:10) அவரில் பாவமில்லை, ஆகவே அவருக்கு மரணமில்லை. ஆயினும் வாழ்நாள் முழுவதும் மரணத்தால் பாழான எம்மை விடுதலை செய்ய விரும்பி மரணத்தோடே போராடத் தலைப்பட்டார். இதற்காகவே அவர் மாம்ச சரீரத்தில் வந்தார். மரணத்தைப் பரிகரித்தார். பரிகரித்தல் என்பது இல்லாமல் செய்வது. நச்சுப்பாம்பு ஒன்றை அடித்து சாக்காட்டினால், அது செத்துக் கிடந்தாலும், அதைப் பார்ப்பவர்கள் அதன் சாயலைக் கண்டு இன்னமும் பயப்படுவார்கள். ஆதலால் அதை புதைத்து விடுவதோ, அல்லது எரித்து விடுவதோ இயற்கை. ஆண்டவர் மரணத்துக்குச் செய்த வேலை அதுதான். மரணத்தை இல்லாமலே அழித்தார். அவர் மரணமற்றவராயிருந்தும் மரணத்தைத் தாமே ஏற்றுக் கொண்டு மரித்தார். மற்றவர்கள் அவரைக் கொன்று விட்டார்கள் என்று நாம் சொல்லக்கூடாது. இது அவர் தாமே வலிந்து ஏற்றுக் கொண்ட மரணம். அவரது உயிரை எடுக்க யாராலும் முடியாது. மரித்தவர் எழும்பவே மரணம் மரித்தது.

உயிர்தெழுந்த எமது இரட்சகர் நாற்பது நாள் சீடரோடு தங்கி, மரண பயத்திற்கு காரணமாயிருப்பவைகளை நிவிர்த்தி செய்தார். அதே ஆண்டவர் இன்னும் எம்முடன் உயிருள்ள ஆண்டவராக வாழ்ந்து கொண்டு இருக்கிறார். ஆகவே அதனை உணர்ந்து, மகிழ்வுடனும் பக்தியுடனும் எம் இறைவனை உணர்ந்து அனுபவிக்க அழைக்கப்படுகிறோம். நமக்குள்ள ஐக்கியத்தைப் புதுப்பித்துக் கொண்டு, ஆவிக்குரிய வாழ்வில் புத்துயிர் பெற்று, ஆண்டவர் இயேசுவின் வழியில் நடப்போமாக. மனம் திரும்பி, கிறிஸ்தவ வாழ்வில் வளர்வோமாக. உள்ளத்தில் உபவாசம் இருந்து உன்னதரை மனதில் காண்போமாக. மகிழ்வின் விடியலை மனதாரக் கொண்டாட எமக்கு மன்னவன் இயேசு துணை புரிவாராக. மரண பயம் மரணிக்க மரணத்தை வென்று, உயிர்த்து எம்முடன் தங்கியிருப்பவரை உற்ற துணையாக்கிக் கொள்வோமாக.

ஏ.பி.ரி

பேராயர் சபாபதி குலேந்திரன்

1900 – 1992

பேராயர் சபாபதி குலேந்திரன் 1900ம் ஆண்டு செப்டெம்பர் 23ம் திகதி பிறந்தார். இவருடைய தந்தையார் சபாதிப்பிள்ளை வரணியைச் சேர்ந்த பிரபல நொத்தாரிசாக விளங்கியவர். இவருடைய தாயார் அன்னம்மா மானிப்பாயைச் சேர்ந்தவர். இவர்களுக்கு மூன்று ஆண்பிள்ளைகளும் ஐந்து பெண் பிள்ளைகளும் பிறந்தனர். பேராயர் குலேந்திரன் மூன்றாவது ஆண்பிள்ளையாகப் பிறந்தார். இவருக்கு நேரே மூத்த சகோதரன் சாமுவேல் அரியரத்தினம் அவர்களே, பின்னர் பிரபல வழக்கறிஞராகி யாழ்ப்பாண மாநகர சபையின் முதலாவது மேயராகும் வாய்ப்பினைப் பெற்றுக்கொண்டவராவார்.

குலேந்திரன் அவர்கள் தன்னுடைய ஆரம்பக் கல்வியை மானிப்பாய் மெமொறியல் ஆங்கிலப் பாடசாலையில் பெற்றுக் கொண்டார். அக்காலம் இப்பாடசாலை கிறீன் வைத்தியசாலை வளாகத்தின் கிழக்கு மூலையில் அமைந்திருந்தது. பின்னர் இவர் தன்னுடைய இடைநிலைக் கல்வியினைப் பெற்றுக்கொள்ளுவதற்காக 1913இல் யாழ்ப்பாணம் பரி யோவான் கல்லூரியிலும் 1923 இல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் இணைந்து கொண்டார். இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி அனுமதியைப் பெற்றுக் கொண்ட இவர் 1928 இல் இந்தியாவின் செரம்பூர் இறையியல் கல்லூரியில் இணைந்து 1931ம் இளம்தெய்வீகவியல் (B.D) பட்டதாரியானார்.

நாடு திரும்பிய இவர் அச்சுவேலி, அளவெட்டி, சாவகச்சேரி, ஏழாலை வடக்கு மற்றும் தெற்கு, வட்டுக்கோட்டை, அராலி ஆகிய இடங்களில் இறைபணியாற்றினார். 1947ம் ஆண்டு தென்னிந்திய திருச்சபை உருவானபோது யாழ்ப்பாணப் பேராயத்தின் முதல் பேராயராக நியமிக்கப்பட்டார். இவருடைய பேராயர் அபிஷேக வழிபாடு சென்னை "சென் ஜோர்ஜ்" பேராலயத்தில் நடைபெற்றது.

1934ம் ஆண்டு தன்னுடைய 34ம் வயதில் செல்வி அலிஸ் மதுரம்மா விஸ்வலிங்கம் அவர்களைத் திருமணம் செய்து தன்னுடைய இல்லற வாழ்வை ஆரம்பித்தார். இவருக்கு 2 ஆண்பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் பிறந்தனர். 1947 – 1970 வரை தென்னிந்திய திருச்சபை, யாழ்ப்பபாண பேராயத்தின் பேராயராக விளங்கிய இவர் சமயங்கள் எனும் துறையில் தலைசிறந்த ஆசிய அறிஞர்களில் ஒருவராக விளங்கினார். சமயங்கள், வரலாறு, இறையியல், மொழிகள் ஆகிய துறைகளில் அதிக ஆர்வம் கொண்ட இவர் தமிழ், ஆங்கிலம் இலத்தின், கிரேக்கம், எபிரேயம், சமஸ்கிருதம் ஆகிய ஆறு மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தார். இவர் 13க்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார். இவைகளில் "Grace in Chirstianity and Hinduism", "The Message and silence in the American pulpit" "தமிழ் வேதாகமத்தின் வரலாறு" என்பன மிகப் பிரபல்யமானவை.

சிறந்த கல்விமானாககவும், இறையியல் வல்லுநராகவும் பத்திமானாகவும் விளங்கிய இவர், மிகவும் எளிமையான வாழ்வை வாழ்ந்து காண்பித்தார். இளைப்பாறிய பின்பு தன்னுடைய மகளுடன் வட்டுக்கோட்டையில் வாழ்ந்த இவர், 1992 பெப்ரவரி 14ம் திகதி இவ்வுல வாழ்வை நீத்து நித்திய இளைப்பாறுதலுக்குளே பிரவேசித்தார். இவருடைய உடல் மானிப்பாய் திருச்சபையின் கல்லறைத் தோட்டத்தில் அவரது மனைவி மதுரம் குலேந்திரன் அவர்களின் கல்லறைக்கு அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன்
தகவல் தொகுப்பு

கல்லறையொன்று... (01ஆம் பக்க தொடர்ச்சி)

அனைவருமே நினைவு கூருகின்றனர். ஆனால் ஆண்டவர் இயேசுவின் வாழ்வு என்பது மரணத்துடன் நிறைவானது அல்ல; மாறாக வழமைக்கும் இயற்கைக்கும் மாறாக உயிர்ப்புடன் தொடர்கின்றதாக உலக வரலாறிலே பதியப்பட்டுள்ளது. ஆண்டவர் இயேசுவினுடைய கல்லறை சொல்லும் கதை புதிய ஒரு வாழ்வைக் குறிக்கும் கதை. **"அவர் இங்கே இல்லை; உயிர்த்தெழுந்தார்"** என்பதே ஆண்டவர் இயேசுவின் கல்லறை கூறிடும் செய்தி. ஆதியாகமம் 49ம் 50ம் அதிகாரங்களிலே யாக்கோபு, யோசேப்புடைய மரணங்களைக் குறித்து வாசித்திருக்கிறோம். அவர்கள் மரணம் நெருங்கும் வேளை எகிப்திலே வாழ்ந்த தமக்கு அன்பான உறவுகளை அழைத்து தங்கள் எலும்புகளை கானானுக்கு போகும்போது எடுத்துக்கொண்டு போகும் படிக்கும் அவைகளை மம்ரேக்கு எதிராக இருக்கின்ற மக்பெலா என்னும் குடும்பக் கல்லறைப் பூமியிலே அடக்கம் பண்ணும்படியும் ஆணையைப் பெற்றுக் கொண்டார்கள். இங்கே உயிர்த்தெழுதல் பற்றி வெளிப்படையாக குறிப்பிடாவிட்டாலும் ஒன்றாகக் / குடும்பமாக உறங்குவது / அடக்கம் பண்ணப்பட்டிருப்பது குறித்த ஓர் நம்பிக்கை தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கேயே உயிர்த்தெழுதலின் நம்பிக்கை துளிர் விடுகிறது.

எசேக்கியேல் தீர்க்கதரிசியின் நூலிலே இந்த எலும்புகள் உயிரடையுமா? என்று கேட்டதற்கு அவைகளுக்கு எதிராகத் தீர்க்கதரிசனம் உரைக்கும்படிக்கும் அவ்வாறு தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டபோது அவைகள் மகா பெரிய சேனையாக உயிர்பெற்று எழும்பின என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆண்டவர் இயேசு தம் பணி நாட்களில் முதன் முதலாக மாற்கு 08:31 இல் தன் பாடுகள் மரணம் என்பவற்றைக் கூறி முடிவில் தான் மூன்றாம் நாளில் உயிர்பெற்றெழுவேன் என்றும் கூறியுள்ளார். பல தடவை இதனை தன்னுடைய சீடர்களுக்கும், மக்களுக்கும் கூறினார். இதனை யூதர்கள் நம்பவில்லை; கல்லறைக்குக் காவல் வைத்தார்கள். ஆனால் அவர் சொன்னபடி உயிர்த்தெழுந்தார். அதனை மறைக்க பணம் கொடுத்து பொய்கதைகளைப் பரப்பும்படி காவலாளர்களை யூத மேலதிகாரிகள் பணித்தனர்.

ஆனால் கல்லறை கருவறையானது. மரித்த ஆண்டவர் உயிர்த்தெழுந்தார். கல்லறை அதிர்ந்தது; கல்லறையினை அடைத்த கல் புரட்டப்பட்டது. எதிரிகளின் கோட்டை தகர்ந்தது. வெற்றி சிறந்து ஆண்டவர் உயிர்த்தெழுந்தார். வாழ்வு இல்லை என்று ஏங்கிய சீடர்களுக்கும், நேசித்த பெண்களுக்கும், அவரைப் பின்பற்றியோருக்கும் வாழவேண்டும் எனத் துடித்தவர்க்கும் உயிர்த்த ஆண்டவர் வாழ்வை அருளுகின்றார்.

பயத்துடன் எம்மாவுக்கு ஓடிய சீடர்கள் நம்பிக்கை இழந்து காணப்பட்டனர். எம்மாவு எனும் கிராமத்துக்கு செல்லும் வழியில் அந்த சீடர்களுக்கு அந்நியராகத் காணப்பட்ட ஆண்டவர், சக பயணியாக இணைந்து பயணித்த ஆண்டவர், நண்பனாக நெருக்கமான ஆண்டவர் இறுதியில் எம்மாவூரை அடைந்தபோது விட்டுப் பிரிய முடியாத சீடர்களுடன் இராத் தங்குகிறார். அப்பத்தைப் பிட்டு அவர்களுக்குக் கொடுக்கிறார். அவர்கள் கண்கள் திறக்கப்படுகின்றன. வேத வசனங்களை விளக்கிக் காண்பிக்கிறார். அவர்கள் இருதயங்கள் கொழுந்து விட்டு எரிகின்றன.

நம்முடைய வாழ்விலும் பயம், எதிர்ப்பு, நம்பிக்கையின்மை, இழப்பு, நெருக்கீடுகள் வரும்போது சிலவேளை ஆண்டவர் நமக்கு அந்நியராகத் தோன்றக்கூடும். ஆனால் அவர் நம்மோடு பயணிக்கிறார். நம் இல்லங்களில் நம்மோடு தங்குகின்றார். நம்மோடு வாழ்கின்றார்.

வாழும் கடவுளுக்காக இறுதிவரை வாழும்படி தீர்மானிப்போம். இறையாசி உங்களோடு கூட இருப்பதாக.

அன்புடன் இறைபணியில்
அருட்பணி.ஏ.எஸ்.தேவகுணானந்தன்
தலைவர், சி.ஏ.சி.எம்

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை தெல்லிப்பளை

தெல்லிப்பளையில் காங்கேசன்துறை வீதியும் கட்டுவன் வீதியும் சந்திக்கும் பிரதான சந்தியில் காணப்படும் தேவாயலமும் அதனருகில் காணப்படும் குருமனையுமே அமெரிக்கன் மிசன் தொண்டர்களடைய முதலாவது தலைமைப் பணிக்களமாகும். அமெரிக்கன் மிசன் தொண்டர்களிலே முதன் முதலில் இலங்கை மண்ணில் காலடி எடுத்து வைத்தவர் சாமுவேல் நியூவெல் என்பவராவர். நீண்ட கடற் பயணத்தில் தன்னுடைய மனைவியையும் பிறந்த குழந்தையையும் பறிகொடுத்த இவர் 24.02.1813இல் கொழும்பை வந்தடைந்தார்.

07.09.1813இல் யாழ்பாணம் வந்த இவர் 08.09.1813 இல் தெல்லிப்பளையில் தற்போது தேவாலயம் இருக்கும் மிஷன் வளாகத்தில் காலடி எடுத்து வைத்து இறைபணிக்கான இடங்களைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டார். இவருடைய பரிந்துரையின் பயனாகவே அமெரிக்கன் மிஷன் சங்கம் தன்னுடைய முதலாவது தொண்டர் அணியினை 1816இல் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியது.

தெல்லிப்பளை அமெரிக்கன் மிஷன் தேவாலயம் போத்துக்கேயர் காலத்தில் (1505 – 1656) கட்டப்பட்டது. 1602ம் ஆண்டில் 34 தேவாலயங்கள் யாழ் குடாநாட்டில் கட்டப்பட்டன என்றும் தெலிப்போலே (Telipole) எனுமிடத்தில் ஆலயமொன்றும் அதற்கருகில் நாடக மேடையொன்றும் கட்டப்பட்டதாகவும் இயேசு சபையினருடைய அறிக்கை கூறுகின்றது. இம் மேடையில் இலத்தீன் மொழியில் ஆற்றப்படும் பிரசங்கம் நாடகமாக மேடையேற்றப்படுவது வழமை. போத்துக்கேயர் இலங்கையை விட்டு நீங்கிய பின்னர் ஒல்லாந்தருடைய ஆட்சியில் 1661ம் ஆண்டில் பல்தேயஸ் என்னும் ஒல்லாந்த மதகுரு இம் மிஷன் வளாகத்தில் இருந்து பணியாற்றியுள்ளார். அவர் இவ்விடத்தை விட்டு 1665இல் போகின்ற வேளையில் அவரால் உருவாக்கப்பட்ட பாடசாலையில் 1000 பிள்ளைகள் படித்தனர் என வரலாறு கூறுகின்றது. 8 வருடங்களாக தெல்லிப்பளைப் பகுதியில் தேவ ஊழியம் செய்து வந்த வண. பாம் பாதிரியார் (Rev. Palm) 1813இல் நியூவெல் வருகின்றபோது கொழும்புக்குச் சென்று விட்டார். இவரை மக்கள் பாலன் பாதிரியார் என்று அழைத்தனர். நியூவெல் வருகின்றபோது வீடு, ஆலயம் என்பன அழிவுற்ற நிலையிலேயே காணப்பட்டன. ஆலயத்தின் சுவரும் தூண்களுமே எஞ்சியிருந்தன.

1816ம் ஆண்டு அமெரிக்கன் மிசன் சங்கம் யாழ்ப்பாணத்துக்கென 07 மிசன் தொண்டர்களை அனுப்பியது. இவர்களில் வண. கலாநிதி டானியல் பூவர் குடும்பமும், வண எட்வேட் வொறனும் தெல்லிப்பளை மிஷன் வளாகத்தில் குடியேறினர். இவ்வேளையில் டானியல் பூவர் அவர்களால் தெல்லிப்பளையில் ஓர் ஆங்கிலப் பாடசாலையும் ஓர் சுதேச பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டன. இதுவே இன்று 208 வருடங்களை நிறைவு செய்துள்ள யூனியன் கல்லூரியாகும். 27.01.1817இல் மிஷன் தொண்டர்கள் அனைவரும் இணைந்து இவ்வாலயத்திலேயே முதல் திருவிருந்தை அனுசரித்தனர். அந்நாட்களில் பொது மக்களுக்கென இலங்கையிலே எங்கும் வைத்தியசாலைகள் இருக்கவில்லை. வண. எட்வேட் வொறனும், வண. ஜேம்ஸ் றிச்சேர்ட்ஸ் அவர்களும் பென்சில்வேனியா வைத்தியக் கல்லூரியிலே குறிப்பிட்டளவு பயிற்சி பெற்றிருந்தமையினால் முதலாவது சிறிய ஒரு வைத்தியசாலையையும் இவ்வளாகத்திலேயே 08.06.1820இல் ஆரம்பித்தார்.

1816 முதல் தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், உடுவில் ஆகிய 5 திருச்சபைகளும் ஒன்றாகவே இயங்கி வந்தன. 1831 முதல் இத்திருச்சபைகள் தனித்து இயங்கத் தொடங்கின. அவ்வேளையில் தெல்லிப்பளைத் தேவாயலத்தில் 29 அங்கத்தவர்கள் இருந்தனர். இவ்வாளகத்திலேயே திருமதி. டானியல் பூவர் அவர்களினால் ஒரு பெண் விடுதிப் பாடசாலை 1819ம் ஆண்டு 8 பெண் பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்டன. 10.08.1820இல் அமெரிக்கன் மிஷன் தொண்டரான வண. ஜேம்ஸ் கரட் அவர்களால் கொண்டுவரப்பட்ட அச்சு இயந்திரமும் முதன்முதல் இங்கு வைத்தே இயக்கப்பட்டது.

இவ்வாறு ஆலயமும் அதன் பணிகளும் பல்வேறு துறைசார்ந்து வளர்ச்சி காண்கின்ற போது இவ்வாலயமும் பாடசாலையும் சில விஷமிகளால் 1835இல் எரியூட்டப்பட்டன. அவ்வேளையில் தெல்லிப்பளை ஸ்தான மிசன் தொண்டராக இருந்த வண. குவிக் அவர்கள் வடக்குத் தெற்காக இருந்த எரிந்த ஒல்லாந்தரின் ஆலயத்தை, எரிந்த சில தூண்களைக் கொண்டு கிழக்கு - மேற்காகக் கட்டி முடித்தனர். கட்டி முடிக்கப்பட்ட ஆலயம் 28.08.1867இல் மீள்பிரதிஸ்டை செய்யப்பட்டது. இவ்வாலயத்தின் பணிகள் தெல்லிப்பளையைச் சூழவுள்ள வடக்கு ஏழாலை, கருகம்பனை, வசாவிளான், பலாலி, தையிட்டி, காங்கேசன்துறை, வடக்கு – தெற்கு மாவிட்டபுரம், வறுத்தலைவிளான், மாத்தனை, மல்லாகம், கொல்லன்கலட்டி, விழிசிட்டி ஆகிய இடங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டமையினால் இவ்வாலயத்தினைப் பெரிதாக்கும் பணிகள் 1908இல் ஆரம்பிக்கப்பட்டு 1915இல் நிறைவு பெற்றன. முழுமையாகப் புனரமைக்கப்பட்ட இவ்வாலயத்தின் மீள் பிரதிஸ்டை வழிபாடு 10.10.1915இல் நடைபெற்றது. 1916இல் நடைபெற இருந்த அமெரிக்கன் மிஷனுடைய நூறாவது ஆண்டு விழாவுக்காக இவ்வாயத்தங்கள் நடைபெற்றன. தொடர்ந்து இவ்வாலயத்தின் பணிகள் 1990ம் ஆண்டில் ஏற்பட்ட தீவிரமான



(11ஆம் பக்கம் பார்க்க)

வினாடிக்கு வினா

போட்டி இல. 001

01. அருட்பொழிவு பெற்றவர் எனப் பொருள்படும் மேசியாவின் வருகை யாருடைய பிறப்பின் மூலம் நிறைவேறியது?
1. இயேசுவின் 2. எலியாவின் 3. நோவாவின் 4. பவுலின்

02. எந்த நற்செய்தி நூல் திருமுழுக்கு யோவானின் வாழ்க்கை முறை பற்றிக் கூறுகின்றது?
1. மத்தேயு 2. மாற்கு 3. லூக்கா 4. யோவான்

03. இயேசு உயிர்த்தெழுந்தபின் இவ்வுலகில் வாழ்ந்த காலம்?
1. 08 நாட்கள் 2. 03 வருடம் 3. 30 வருடம் 4. 40 நாட்கள்

04. திருத்தொண்டர்கள் நியமிக்கப்படக் காரணம்?
1. விதவைகள் விசாரிக்கப்பட 2. செபிக்க
3. நற்செய்திபணி புரிய 4. யூதர்கள் விசாரிக்கப்பட

05. சவுல் எந்த இடத்தை நோக்கிப்பயணம் செய்தபோது மனம் மாறினார்?
1. அந்தியோகியா 2. பெர்கே 3. தமஸ்கு 4. தெர்பை

06. இயேசுவானவர் “பேறுபெற்றவர்கள்“ பற்றிக் கூறிய உரை எந்தெந்த நற்செய்தி நுல்களில் காணப்படுகின்றன?
1. மத்தேயு, மாற்கு 2. லூக்கா, மாற்கு
3. லூக்கா, யோவான் 4. மத்தேயு, லூக்கா

07. விதைப்பவன் உவமை மூலம் நாம் அறிந்து கொள்வது?
1. விதையின் ரகங்கள் 2. விதைப்பவனின் உற்சாகம்
3. இறைவனின் வார்த்தை 4. விளைச்சலின் மேன்மை

08. எகிப்திலிருந்து விடுதலை பெற்ற இஸ்ரவேலர் பயணம் செய்த காலம்?
1. 30 வருடம் 2. 40 வருடம் 3. 50 வருடம் 4. 60 வருடம்

09. “ஆபிராம்” என்பதன் பொருள் யாது?
1. விசுவாசத்தின் தந்தை 2. வியத்தகு ஆலோசகர்
3. அமைதியின் தந்தை 4. அருட்பொழிவு பெற்றவர்

10. ஆண்டவருடைய ஆவி என்மேல், அவர் எனக்கு அருட்பொழிவு செய்துள்ளார் எனும் இறைவாக்கை முன்வைத்தவர்?
1. எரேமியா 2. எசேக்கியா 3. மீக்கா 4. ஏசாயா

11. ஏனைய படைப்புக்களை விட மனிதனிடத்தில் உள்ள விசேட தன்மையானது?
1. ஆன்மா 2. உடல் 3. இறைசாயல் 4. அழகு

12. சேறுநிரம்பிய பாழாங்கிணற்றில் போடப்பட்டு, உணவின்றி பல நாட்கள் இருந்தும் மரணத்திலிருந்து காப்பாற்றப்பட்டவர்?
1. எரேமியா 2. எசேக்கியா 3. ஏசாயா 4. தானியேல்

மேல் காணும் போட்டிக்கான பதில்களை எழுதி அனுப்புங்கள். சரியான பதிலை அனுப்பி வைக்கும் போட்டியாளர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசில் வழங்கப்படும். மற்றைய வெற்றியாளர்களின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். சரியான பதில்கள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி

உதயதாரகை
ஆசியா இல்லம்,
மருதனார்மடம், சுன்னாகம்

மின்னஞ்சல் முகவரி

themorningstar1841@gmail.com

Whatsapp

0773 627 537

இறுதித் திகதி 26-04-2024

குறுக்கெழுத்துப் போட்டி

போட்டி இல 001

01 வி	02			03 வி
04	ர	■	05 ழ்	
06	■	07	த்	
08	09 த்	தி		
10 ம்			ம்	ர

இடமிருந்து வலம்

01. பண்டைய கவிகளுள் ஒருவர். மற்றையோரை மகிழ்விப்பவர். இடமிருந்து வலமாகவும், வலமிருந்து இடமாகவும் வாசிக்கலாம்.
04. -- மண்டலம் (வாத்தியக்கருவி)
05. வாத்தியக்கருவி. ஊர்ப்பெயரும் கூட (திரும்பியுள்ளது)
06. போ என்பதன் எதிர்ச்சொல்
07. வயல்களில் கட்டுவது (திரும்பியுள்ளது)
08. ஆண்டவர் பிறந்தது.
10. ஆர்வமாய் என்றும் கூறலாம் (குழம்பியுள்ளது)

மேலிருந்து கீழ்

01. இறைவன் மீது வைப்பது
02. கை (கடைசி எழுத்து விடுபட்டுள்ளது)
03. வர்த்தகம் (கடைசி இரண்டு எழுத்தும் மாறியுள்ளது)
07. எனப்பட்ட தோமா
09. கடலுக்குள் எடுப்பது (கடைசி எழுத்து விடுபட்டுள்ளது மற்றும் திரும்பியுள்ளது)

மேல் காணும் போட்டிக்கான பதில்களை எழுதி அனுப்புங்கள். சரியான பதிலை அனுப்பி வைக்கும் போட்டியாளர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசில் வழங்கப்படும். மற்றைய வெற்றியாளர்களின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். சரியான பதில்கள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

அன்பின் வாசகர்களே!

கடந்த காலத்தில் தங்கள் ஆக்கங்களுக்கூடாகவும் ஜெபங்களுக்கூடாகவும் நன்கொடைகளுக்கூடாகவும் உதவியமைக்கு நன்றிகள். தொடர்ந்தும் தங்கள் ஆக்கங்களை உதயதாரகை இதழுக்கு தந்துதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். மேலும் இத்திருப்பணியை உங்கள் ஜெபங்களுக்கூடாகவும் நன்கொடைகளுக்கூடாகவும் தாங்கும்படியும் அன்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:

The Editor, The Morning Star, Asia House,
Maruthanarmadam, Chunnakam. 0777 422 207.
E.mail : *themorningstar1841@gmail.com*

கிறிஸ்தவ சேவ ஆச்சிரமங்களின் இறைபணியாளன்
சின்னண்ணனின் 53 வருட சிரார்த்த தின
நன்றி செலுத்தும் நற்கருணை வழிபாடு

மருதனார்மடம், யாழ்ப்பாணம்

கடந்த 2023-12-30 அன்று மாலை 4.00 மணிக்கு எமது அன்பான சின்னண்ணன், அருட்பணி. சேவக். ஐ. த. இயேசுசகாயம் அவர்களின் வாழ்வுக்கும் பணிக்கும் கடவுளுக்கு நன்றி கூரும் 53ஆவது ஆண்டு நற்கருணை வழிபாடு மருதனார்மடம் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

இவ்வழிபாட்டில் இறைசெய்தியை மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் அதிபர் அருட்பணி. A. கமலக்குமார் அவர்களும் நினைவுரையை நவாலியைச் சேர்ந்த திரு. நாகையா அவர்களும் பகிர்ந்து கொண்டார்கள்.

கிரான், மட்டக்களப்பு

அதே போன்று கடந்த 2023-12-30 அன்று 4.00 மணிக்கு எமது அன்பான சின்னண்ணன், அருட்பணி. சேவக். ஐ. த. இயேசுசகாயம் அவர்களின் வாழ்வுக்கும் பணிக்கும் கடவுளுக்கு நன்றி கூரும் 53ஆவது ஆண்டு நற்கருணை வழிபாடு கிரான் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.
இவ்வழிபாட்டில் இறைசெய்தியை மெதடிஸ்த திரு அவை, சின்ன ஊரணியைச் சேர்ந்த அருட்பணி. K. ஜெகதாஸ் அவர்களும் நினைவுரையை கிரானைச் சேர்ந்த திருமதி. நவரஞ்சிதம் ஜோன் அவர்களும் பகிர்ந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு இறை... (01ஆம் பக்க தொடர்ச்சி)

பரிமாற்றமும் விரிவுரையாளர்களின் பரிமாற்றமும் தொடர்ச்சியாக நடைபெறவேண்டும் என்கின்ற ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டது. கலந்துரையாடலின்போது தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் கல்வி பயின்ற எம் திருச்சபையின் அருட்பணியாளர்களும் இதிலே கலந்து கொண்டார்கள்.

மூன்று நாட்கள் எம் இறையியல் கல்லூரியில் தங்கியிருந்த இவர்கள் திருச்சபைகளின் தலைவர்களையும் சந்தித்து உரையாடியதோடு யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் இருக்கின்ற பல இடங்களை பார்வையிட்டார்கள். அதன் அடிப்படையில் மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரிக்கு முழு ஆதரவையும், உதவியையும் நல்குவோம் என்ற உறுதிப்பாட்டையும் தந்திருந்தார்கள்.

இறையியல்... (01ஆம் பக்க தொடர்ச்சி)

பட்டது. இக்கற்கை நெறியினை நெறிப்படுத்தியவர் அருட்கலாநிதி எலியேசர் பெனாண்டஸ் (ஓய்வு நிலை அதிபர், ஐக்கிய இறையியல் கல்லூரி, பிலிப்பைன்ஸ்) ஆகும். இக்கற்கை நெறியில் அங்கிலிக்கன், மெதடிஸ்த, அமெரிக்கன் சிலோன் மிஷன், சுயாதீன திருச்சபைகள், இறையியல் கல்லூரி மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இக்கற்கை நெறிகளுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

சேவைத் திருப்பணிமன்றக்
கலந்துரையாடல்

மேற்படி கூட்டமானது 17.02.2024 அன்று 02:30 மணியளவில் பெரியநீலாவனையில் நடைபெற்றது. இக் கூட்டமானது அருட்பணி. டானியல் செல்வகுமார் போதகர் அவர்களின் ஜெபத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இயக்குநர், உதவி இயக்குநர், நிர்வாக உத்தியோகத்தர்கள், இல்ல முகாமையாளர், இல்ல பாதுகாவலர்கள் ஆகியோருடன் தன்னார்வத் தொண்டர்கள் ஏவா, இவா, கிரேசியும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கடந்த வருடத்தின் வரவு செலவு பட்டியல் பற்றியும், இந்த வருடத்திற்கான வரவு செலவு பட்டியல் பற்றியும், கடந்த காலங்களில் செய்த செயற்பாடுகள் எதிர்கொண்ட சவால்கள் பற்றியும், இந்த வருடத்திற்கான எதிர்கால திட்டமிடல் மற்றும் விசேட தேவைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. கடந்த காலங்களில் அடைவு மட்டம் ரீதியில் சவால்கள், பிள்ளைகளின் உடல்நிலை சம்பந்தமான விடயங்கள், போதிய இடவசதியின்மை, மாணவர்களுக்கு நோய்கள் ஏற்படும்போது அவர்களுக்கான நோயாளர் அறையின்மை போன்ற சவால்கள் சென்ற வருடத்தில் எதிர்கொள்ளப்பட்டன.

எதிர்காலத்தில் மாணவர்களுடைய வீடுகளில் சென்று சந்தித்தல், மாணவர்களை சுற்றுலாப்பயணம் அழைத்துச் செல்வது,

(11ஆம் பக்கம் பார்க்க)

ஞாயிறு பாடசாலை... (01ஆம் பக்க தொடர்ச்சி)

இறையியல் கல்லூரியில் நடைபெற்றது.

இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள பாடத்திட்டத்திற்கான அறிமுக செயலமர்வாக இது நடாத்தப்பட்டது. இதில் எமது சி.எ.சி.எம் திருச்சபையின் 4 பிராந்தியங்களையும் சேர்ந்த 49 ஆசிரியர்களும் 5 குருமாரும் பங்குபற்றியதுடன் எனைய திருச்சபைகளான சி.எஸ்.ஐ திருச்சபை 6 மெதடிஸ்த திருச்சபை 5 பப்டிஸ்த திருச்சபை 3 அங்கிலிக்கன் திருச்சபை 4 ஆசிரியர்களுமாக சேர்த்து மொத்தம் 72 பேர் இந்த செயலமர்வில் பங்குபற்றியிருந்தனர்.

இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் வளவாளர்களாக அதன் தலைவர் பேராயர். அதி. வண. அறிவர். வே. பத்மதயாளன் மற்றும் திருமதி. வனஜா இராஜ்குமார், திருமதி. லிப்னியா ரூபன், திருமதி. லாவன்யா றொஷான், ஆகியோரும் இவர்களுடன் கிறிஸ்தவ கல்விக்கான ஆணைக்குழுவின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் திருமதி.ஸ்டெலா தர்ஷினி மற்றும் பணியாளர்களும் கலந்துகொணடு இச் செயலமர்வினை சிறப்பாக நடாத்தினார்கள். அபிநயப் பாடல், ஆக்கச் செயற்பாடுகளிற்கான பயிற்சியினை Child Evangelism Fellowship ஸ்தாபனத்தின் 3 வளவாளர்கள் வழங்கினர்கள்.

செயலமர்வின் இறுதியில் பங்குபற்றியவர்களிற்கான சான்றிதழ் வழங்கப்பட்டதுடன் வளவாளர்களிற்கு சி.எ.சி.எம் திருச்சபையால் நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதின்போது சி.எ.சி.எம் திருச்சபை தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணாணந்தன் அவர்கள் நிகழ்வில் கலந்து சிறப்பித்தார். மேலும் இச் செயலமர்வினை ஒழுங்கமைத்த சமயக்கல்வி குழுவின் இணைப்பாளர் அருட்பணி. ரி. டானியல் ரஞ்சித் அவர்களுக்கு உதயதாரகையின் பாராட்டுக்கள்.

இறையியற்... (01ஆம் பக்க தொடர்ச்சி)

யாளர்களுடனும் நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

சென். சேவியர் குருத்துவ கல்லூரியின் அதிபர் அருட்கலாநிதி கிருபாகரன், உதவி அதிபர் அருட்பணி ஜெராட் சவரிமுத்து மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் அதிபர் அருட்பணி கமலகுமாரன் ஆகியோரால் ஒன்றிப்பின் முக்கியத்துவம் பற்றிய கருத்துக்கள் திருமறையின் அடிப்படையில் பகிரப்பட்டன. அதன் பின் பொது உரையாடல் நடைபெற்றது. இந்நிகழ்வானது ஒன்றிப்புக்கான முன்னுதாரணமாக அமைந்திருந்தது.

Dear Friends, *January 2024*

Gift of Hope ....for children

As we step into 2024, Sri Lanka continues to be in the middle of its worst economic crisis. Though there is much talk of stabilization and long-term visions the reality is that this crisis continues to have a devastating impact on the most vulnerable in our country. Various estimates show that close to 17% of the country is food insecure. Larger numbers in the country are reducing their food intake and in several districts alarmingly high percentages of children aged 3-5 are at risk of severe malnutrition. We are facing severe harm that will devastate a generation of poor children unless we act.

Samsung Triple Camera

The Diaconal Ministry of CACM has since the end of war supported over a 1,000 children aged 3-5 with nutritional feeding and early childhood education for close to two decades from the late years of the war until now. This support is provided through a network of over 30 pre-schools which are in the Jaffna, Kilinochchi, Mullaitivu, Vavuniya, Mannar, Batticaloa and Nuwara Eliya Districts. In Sri Lanka as there is no national pre-school system these centers provide critical preparation for schooling for children from poor and war affected communities, including ones that were historically marginalized on the grounds of caste throughout the North East and also in the Up Country.

At Christmas when we reflect on God's presence among us in the form of a vulnerable child, we are asking you to partner with us in working to support vulnerable children in the North East and Up Country. We have support for 800 children but we need to find the support for 200 more and we are appealing to interested individuals and organizations and churches to help us meet this vital need.

The support we need is $300 US a child per year and from which children will receive a meal and a nutritional snack per school day and will also be provided with early childhood learning so that they do not enter school already behind in their schooling.

Funds can be sent to us in Sri Lanka or to partner organizations in the US and the UK.

1. **Sri Lanka**

Account Name: CACM Charity Ball
Account Number: 101000426084
Bank: National Development Bank PLC **Branch:** Chunnakam
Bank Address: 30 KKS Road, Chunnakam, Sri Lanka
Bank Code: 7214 **Branch Code:** 62
Swift Code: NDBSLKLX

If you send funds to this account, please send email notification to: cacm.diaconalmission@gmail.com
CACM Office Address: CACM, CTS – Maruthanarmadam, Jaffna, Sri Lanka.

2. **United States:**

You can send funds through our partner Visions Global Empowerment who can receive, hold and then forward the funds to us. They can also issue US residents with tax receipts. The contact person is Mr. Greg Buie, he can be reached at gtbuie@gmail.com
Please inform him that the funds are for Early Childhood Education with CACM.

3. **United Kingdom**

You can send funds through Tamil Aid. They can issue tax receipts for UK tax payers and receive the 25% Gift Aid top up. The contact person is Meera Arnold who can be reached at meeraarnol@aol.com or meera@bbkca.com
Please inform her also that the funds are for Early Childhood Education with CACM.
If you require any further information or clarification about this appeal, please do get in touch with us.

Yours Sincerely,

Rev.A.S.Thevagunananthan
(Chairperson CACM)

Priveen Joseph
(Deputy Director, Diaconal Ministry)

Rev. A.S. Thevagunananthan
Chairperson
Church of the American Ceylon Mission
Central office – Asia House
Maruthanarmadam, Chunnakam
Sri Lanka

for and on behalf of Diaconal Ministry Team of CACM

Prayers for the Plain Man

- William Barclay

First Day

In the Morning

O God, our Father, Who commanded us to live in fellowship with one another, keep us from everything which would make us difficult to live with today.

Help us never thoughtlessly or deliberately to speak in such a way that we would hurt anther`s feelings, or wound another`s heart.

Keep us from all impatience, from all irritability, and from a temper which is too quick.

Keep us from eyes which are focused to find fault and from a tongue which is tuned to criticse.

keep us from being touchy, and quick to take offence, and slow to forget it.

Help us not to be stubborn and obstinate, and keep us from the selfishness which can see nothing but its own point of view, and which wants nothing but its own way.

Grant to us all through this day something of the grace and beauty which shone upon our blessed Lord Jesus.

Hear this our prayer, for your love`s sake. Amen.

In the Evening

Eternal God, Who gave us this day, and who now at evening time are taking it back to Yourself, forive us for all which today we did not do.

Forgive us for any word of comfort, of praise, of thanks, which we might have spoken, and did not speak.

Forgive us for any help we might have given to some one in need, and did not give.

Forgive us if today we have made things more difficult for anyone.

forgive us if by word or action we have set a bad example to any one and have made it easier for another to go wrong.

Forgive us if today we have been disloyal to any friend, or if we have hurt the hearts of those whom above all we ought to cherish.

Grant us this night Your gift of sleep; and grant us grace that tomorrow we may walk more close to You: through Jesus Christ our Lord. Amen.

பிராந்திய நிகழ்வுகள்

ஒருங்கிணைந்த இன்னிசை வழிபாடும் ஒளிவிழாவும் - கிழக்கு

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் நற்செய்தியை அறிவிக்கும் ஒருங்கிணைந்த இன்னிசை வழிபாடு கிழக்குப் பிராந்திய திருச்சபைகளான கித்துள் திருகோணமலை, பெரிய நீலாவணை, தும்பலாஞ் சோலை, இறாலோடை, முறக்கொட்டாஞ்சேனை, மற்றும் ஊறணி திருச்சபைகள் இணைந்து பெரிய நீலாவணை திருச்சபையிலே 09.12.2024 ம் திகதி நடைபெற்றது. திருச்சபை அருட்பணியளார்களான அருட்பணி. எஸ். ஜோன் புவியரசன் - பெரிய நீலாவணை திருச்சபை, அருட்பணி. எஸ். டானியல் செல்வகுமார் - கித்துள் தும்பலாஞ்சோலை திருச்சபை, அருட்பணி. பியூறா செல்வகுமார் - முறக்கொட்டாஞ்சேனை திருச்சபை, அருட்பணி. நிவில்ரூபராஜ் - இராலோடை திருச்சபை, அருட்பணி. லூக் ஜோன் - பிராந்திய குருமுதல்வர் மற்றும் ஊறணி திருச்சபை ஆகியோர் கலந்து கொண்டனர்.

கித்துள் தும்பலாஞ்சோலை மற்றும் முறக்கொட்டாஞ்சேனை அத்துடன் இராலோடை திருச்சபை பாடகர் குழுவினர் மிகவும் சிறப்பாக தங்கள் பாடல்களை பாடி இறைவனை மகிமைப் படுத்தினார்கள். வசதி குறைந்த கிராமங்களாக காணப்பட்டாலும் கித்துள் தும்பலாஞ்சோலை, முறக்கொட்டாஞ்சேனை மற்றும் இராலோடை திருச்சபைப் பாடகர் குழுவினரை பல சிரமங்களுக்கு மத்தியில் திருச்சபை அருட்பணியாளர்கள் தங்களை அர்ப்பணித்து பாடகர் குழுவினரைச் சிறப்பாகத் தயார்படுத்தியிருந்தார்கள். அதே நேரத்தில் பெரியநீலாவணை திருச்சபை மற்றும் ஊறணி திருச்சபை பாடகர் குழுவினரும் தங்கள் பாடல்களை சிறப்பாகப் பாடினார்கள். இவ்வின்னிசை வழிபாட்டைச் சிறப்பாக ஒழுங்கமைப்பதற்கு பிராந்தியக் குருமுதல்வர் அருட்பணி. எம். லூக் ஜோன் அவர்கள் சிறப்பான ஒத்துழைப்பை வழங்கியிருந்தார். அதே நேரத்தில் இவ்வின்னிசை வழிபாட்டை நேர்த்தியாக ஒழுங்கமைப்பதற்கும் சிறப்பாக நடப்பதற்கும் சகல வழிகளிலும் பெரியநீலாவணை திருச்சபை மக்கள், திருச்சபைக் குருவானவர் அருட்பணி. எஸ். ஜோன் புவியரசன் ஆகியோர் தங்கள் ஒத்துழைப்பை சிறப்பாக வழங்கியிருந்தனர். இவ் வழிபாட்டில் சமாதானபுரம் திருச்சபையின் அருட்பணியாளரான அருட்பணி. ரி. சுசேந்தன் அவர்கள் இறைசெய்தியைத் தனது தாய்த் திருச்சபையில் பகிர்ந்து கொண்டார். ஒன்றிணைந்த இன்னிசை வழிபாடு முடிந்தவுடன் காலை ஐக்கிய உணவு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கிறிஸ்மஸ் இணைந்த ஒளிவிழா சிறப்பாக நடைபெற்றது. கிழக்குப் பிராந்திய அனைத்து திருச்சபைகளும் இரண்டு நிகழ்ச்சிகளை அரங்கேற்றியிருந்தனர். கிறிஸ்மஸ் இணைந்த ஒளிவிழா முடிந்தவுடன் மதிய உணவுடன் அனைத்து நிகழ்வுகளும் இனிதே நிறைவடைந்தது. இவ்வளவு பெரிய நிகழ்வுகளையும் கிழக்கு பிராந்திய நற்செய்தி பணிக்குழு சிறப்பாக முன்னெடுத்து ஒழுங்கமைத்திருந்தது. நற்செய்தி பணிக்குழுவின் இணைப்பாளர் வே. இ. மாறவர்மன் பல வேலைப்பழுக்களின் மத்தியிலும் கிழக்குப் பிராந்தியத் திருச்சபைக் குருக்களின் பூரண ஒத்துழைப்புடன் சிறப்பாக இவைகளை ஒழுங்கமைத்திருந்தார். இந் நிகழ்வின் மூலம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமையடைந்தது. **- கிழக்குப் பிராந்தியம் -**

வாலிபர் ஒன்றுகூடல் - யாழ்

யாழ் பிராந்திய வாலிபர் பணியின் வருடாந்த ஒன்றுகூடல் 03.02.2024 அன்று தெல்லிப்பளைத் திருச்சபை வளாகத்தில் வாலிபர்பணி இணைப்பாளர் திரு. ஆர். சுஜந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மேற்படி நிகழ்வில் குழு நிகழ்வுகள், கருத்தமர்வுகள் மறறும் விளையாட்டுகள் என்பன நடைபெற்றன.

மதிய ஐக்கிய உணவின் பின்னர் வாலிபர் பணிக்கான புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர். சென்ற வருடங்களில் பணியாற்றிய செயலாளர் மற்றும் பொருளாளருக்கான நன்றி நவிலும் நினைவு பரிசில்களும் வழங்கப்பட்டு வாலிபர் பணியின் புதிய ஆண்டுக்கான செயல்பாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டு ஒன்றுகூடல் இனிதே நிறைவுற்றது. மேற்படி நிகழ்வில் பிராந்திய குருமுதல்வர் அருட்பணி. எம். டி. போல்சுரேஷ் மற்றும் அருட்பணியாளர்களான அருட்பணி. ஜே. அன்டனி சுதாகர், அருட்பணி. ஜே. ஞானப்பிரகாசம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் வாலிபர் பணியகத்தினால் விசேட பாடல் அடங்கிய இறுவெட்டு, பொதுவான மற்றும் தவக்காலச் சிந்தனைகள், சர்வதேச தினங்களை முன்னுட்டு கவிதை தொகுப்புக்கள் போன்றவற்றை தமது முகநூல் வழியாகவும் youtube செயலி வழியாகவும் காலத்துக்கு காலம் வெளியிட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது **- யாழ்பிராந்தியம் -**

ஒன்றிணைந்த இன்னிசை வழிபாடு - யாழ்

யாழ் பிராந்தியத்தின் ஒன்றிணைந்த இன்னிசை வழிபாடானது 17.12.2023 ஞாயிறு மாலை 03.00 மணிக்கு மானிப்பாய் திருச்சபையில் சிறப்பாக நடைபெற்றது. இவ் வழிபாட்டில் யாழ் பிராந்தியத்தின் அனைத்து திருச்சபைகளும் சிறப்பு பாடல்களைப் பாடி ஆண்டவரை மகிமைப் படுத்தினர். மேற்படி வழிபாட்டில் ஆரம்ப ஜெபத்தினை மானிப்பாய் திருச்சபையின் அருட்பணியாளர் அருட்பணி. டி. எஸ். மதியாபரணம் அவர்கள் ஏறெடுத்தார். பிறப்பின் செய்தினை இறையியல் கல்லூரி அதிபர் அருட்பணி. ஏ. கமலகுமாரன் அவர்கள் வழங்கினார். நிறைவு ஜெபத்தினையும் ஆசீர்வாதத்தினையும் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் வழங்கினார். மேற்படி இன்னிசை வழிபாட்டினை நற்செய்தி பணி மன்றத்தின் இயக்குனர் அருட்பணி. நேசன் கெனடி அவர்கள் பொறுப்பேற்று நடத்தினார்.



- யாழ் பிராந்தியம் -

ஒளிவிழாவும் ஒன்றுகூடலும் – கொழும்பு

கொழும்பு கல்கிசை நகர்ப்புற பகுதியில் ஏழைச் சிறுவர்கள் மத்தியில் 17-12-2023 மாலை 4 மணியளவில் சிறுவர் கல்வி பணி கூடத்தில் ஒளிவிழா நடைபெற்றது. இதன்போது பல கலைநிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டு பிள்ளைகளுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து ஐக்கிய இரவுப்போசனம் பரிமாறப்பட்டது. இவ் ஒளிவிழாவை கொழும்பு திருச்சபையைச் சேர்ந்த செல்வி. ஜோய்ஸ் சசிகுமார் அவர்கள் சிறந்த முறையில் ஒழுங்கு செய்திருந்தார். இதன் பணிகளைத் திருமதி. ராஜி விஜயரட்ணம் அவர்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறார். இச் சிறுவர்களின் நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்கும் கொழுப்பு திருச்சபை நண்பர்களுக்கு உதயதாரகையின் வாழ்த்துக்கள்.

மேலும் கொழும்பு திருச்சபையின் வருடாந்த குடும்ப ஒன்று கூடல் 29-12-2023 அன்று மாலை நடைபெற்றது இம்முறை இவ் ஒன்றுகூடலில் திருச்சபையின் அநேக சிரேஸ்ட உறுப்பினர்கள் பங்குபற்றியதுடன் கலைநிகழ்ச்சிகளையும் வழங்கியது மகிழ்ச்சிகுரியதாகும்.

- கொழும்பு பிராந்தியம் -

குடும்ப ஒன்று கூடல்

யாழ் பிராந்திய குடும்ப ஒன்றுகூடலானது 09.12.2023 சனிக்கிழமை காலை 09.00 மணிக்கு பலாலி கத்தோலிக்க திருச்சபை வளாகத்தில் முழுநாள் நிகழ்வாக நடைபெற்றது. மேற்படி நிகழ்வில் பிராந்தியத்திலுள்ள அனைத்து திருச்சபைகளும் உற்சாகமாகக் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் ஆரம்பத்தில் நடைபெற்ற வழிபாட்டில் அனைத்துத் திருச்சபைகளின் பிரதிநிதிகள் வழிபாட்டை நடாத்திக் கடவுளை மகிமைப்படுத்தினர்.

மேலும் விளையாட்டுக்கள், குழு நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் ஆகியவற்றைப் பெண்கள் சங்க தலைவி திருமதி. பி. டோறீன், சமயக்கல்வி குழு இணைப்பாளர் அருட்பணி. எஸ். சுதாஜினி மற்றும் வாலிபர் சங்க இணைப்பாளர் திரு. ஆர். சுஜந்தன் ஆகியோர் தலைமை தாங்கிச் சிறப்பாக நடத்தினார்கள். இந்நிகழ்வில் பெண்கள், சிறுவர்கள், வாலிபர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

- யாழ் பிராந்தியம் -

Service of Confirmation

A service of confirmation was held on 31st of December 2023 at the CACM Tellippallai church. The service was led by the chairperson of the CACM, the Rev. A. S. Thevagunananthan and followed with the holy eucharist led by the chairperson with the assistance of the parish priest of the church the Rev. T. E. Ashokumar and the secretary of the CACM the Rev. A. B. Thevathas. The large number of relatives, friends and the parish members gathered in the solomn service.

The service was followed by a fellowship breakfast which was organized by the parents of the candidates Mr. Andrew Jeyarajah and Mrs. Bharathy Andrew. The candidates Adriean Jeyarajah and Jonathan Jeyarajah were born & bread in the United Kingdom and the service was held both in Tamil and English.

அருட்பணியாளர்களின் ஒன்றுகூடல்

யாழ் பிராந்திய அருட்பணியாளர்களின் வருடாந்த ஒன்றுகூடல் 19.01.2024 வெள்ளிக்கிழமை காலை 09.00 மணிக்கு காங்கேசன்துறை “Thalsevena Resort” ல் நடைபெற்றது. தொடக்க வழிபாட்டினை அருட்பணியாளர் ஒன்றியத்தின் செயலாளர் அருட்பணி. ஏ. கமலகுமாரன் அவர்கள் நடத்தினார்கள். மேற்படி நிகழ்வில் போதகர் போதகரம்மா மற்றும் பிள்ளைகளுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டு மதிய ஐக்கிய உணவுடன் நிறைவு பெற்றது.

- யாழ் பிராந்தியம் -

ஞான ஒடுக்கம்

வன்னிப்பிராந்தியத்தில் 06.01.2024 கிறிஸ்து அரசர் ஆலயம் கிளிநொச்சியில் வன்னிப் பிராந்திய பணியாளர்களுக்கான ஞான ஒடுக்கம் நடைபெற்றது. இதில் வழிபாட்டை குருமார்கள் நடாத்தினார்கள். இறைசெய்தியை வன்னிப் பிராந்திய குருமுதல்வர் அருட்திரு. ஆர். யோன்செல்வம் வழங்கினார்.

திருமறைப் படிப்பை அருட்திரு. டேவிட் நிருசிகன் அவர்களும், சமூகபணிமன்றின் இயக்குனர் திரு. பிரவீன் யோசேப் அவர்களும் வழங்கினார். வாழ்த்துச் செய்தியை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் பொருளாளர் திரு. என். ரமேஸ்குமார் வழங்கினார். மதிய உணவோடு இனிதே நிறைவேறியது.

- வன்னிப் பிராந்தியம் -

சர்வதேச பெண்கள் தின சிறப்பு நிகழ்வு

யாழ் பிராந்திய பெண்கள் சங்கத்தினரால், சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு 08-03-2024 வெள்ளிக்கிழமை காலை 09 மணியளவில் நவாலித் திருச்சபையில் பெண்கள் சங்கத் தலைவி திருமதி. பி. டொறீன் அவர்களின் தலைமையில் பெண்களுக்கான ஞான ஒடுக்க நிகழ்வு நடைபெற்றது.

ஆரம்ப வழிபாட்டினை வருகை தந்த பெண்கள் சங்க அங்கத்தவர்களால் நடாத்தப் பட்டது. இறைசெய்தியினை இரட்ணியசேனையை சேர்ந்த கப்டன். எஸ் தங்கேஸ்வரி அவர்களால் வழங்கப்பட்டது. இதன் பின்னர் இரட்சணிய சேனை கப்டன். எஸ். தங்கேஸ்வரி அவர்களால் **“பெண்களுக்கு அழகு எது?”** என்ற தலைப்பில் திருமறை படிப்பும் கலந்துரையாடலும் இடம் பெற்றன. தொடர்ந்து அருட்பணி. எஸ். சுதாஜினி அவர்களால் திருமறையில் பெண்கள் ஆற்றிய திருப்பணிகள் என்ற சிந்தனையில் வழி நடத்தியதுடன் விளையாட்டுகளையும் முன்னெடுத்தார்.

இதன் பின்னர் புதியாண்டுக்கான நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இந்நிகழ்வு சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றியை தெரிவித்ததோடு விசேடமாக மதிய உணவு மற்றும் தேனீர் சிற்றுண்டிகளையும் வழங்கிய நவாலி திருச்சபையின் பெண்கள் சங்கத்தினர், நிர்வாக செயற்குழுவினர்கள் மற்றும் அருட்பணி. ஜே. அன்டனி சுதாகர் ஆகியோருக்கும் செயலாளர் திருமதி. மாலா மதியபரணம் அவர்களால் நன்றி கூறப்பட்டு, சபைக்குருவின் ஜெபத்தோடும் ஆசீர்வாதத்தோடும் நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.

- யாழ் பிராந்தியம் -

தவக்கால நற்செய்திக் கூட்டங்கள்

தவக்காலத்தை முன்னிட்டு வன்னிப் பிராந்தியங்களின் பல இடங்களில் நற்செய்தி கூட்டங்கள் பிராந்திய ரீதியில் முன்னேடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் 23.02.2024 திகதி அன்று கிளிநொச்சி, பாரதிபுரம் திருச்சபைகள் இணைந்து முறுகண்டி திருச்சபையில் நடைபெற்றது. இதில் பிராந்திய அருட்பணியாளர்கள் வழிபாட்டை முன்னெடுக்க அருட்பணி. பி. விஜயதாஸ் அவர்கள் இறைசெய்தியை பகிர்ந்தார்.

தொடர்ந்து 01.03.2024 திகதி அன்று சுதந்திரபுரம் திருச்சபையில் நடைபெற்றது. இதன் போது அருட்பணி. ஆர். ஜோன் செல்வம், அருட்பணி. பி. சந்திரசேகர், அருட்பணி. எஸ். சதிஸ்குமார், சகோதரன் பிரகாஷ் ஆகியோர் வழிபாட்டை முன்னெடுத்தனர். இதன்போது அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் இறைசெய்தியை பகிர்ந்தார்.

மேலும் 08.03.2024 திகதி அன்று புனித தோமா ஆலயம் பூவரசங்குளத்தில் மாலை 6.00 மணிக்கு நற்செய்தி கூட்டம் நடைபெற்றது. இவ் வழிபாட்டை அருட்பணி. ஆர். யோன்செல்வம், அருட்பணி. வி. டேவிட் நிருசிகன், அருட்பணி. ஜி.ஜெயகுமார், அருட்பணி. எஸ். சதீஸ்குமார் Pastor ரொபின்சன் ஆகியோர் இறை வழிபாட்டை நடாத்தினார்கள். இதில் இறைசெய்தியை அருட்பணி. ரி. சுசேந்தன் அவர்கள் வழங்கினார். கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் இரவு ஐக்கிய உணவு வழங்கப்பட்டது. மேலும் இன்று(15.03.2024) சமாதானபுரம் திருச்சபையில் வழிபாடு நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடதக்கது.

- வன்னிப் பிராந்தியம் -

EMEMBERING OUR GUIDING LIGHT, THE LIGHTHOUSE

R.I.P. - Our K.P.

Obituary - Nonagenarian K. Pooranampillai - Fiat Lux

We mourn the death Mr. Kanapathipillai Pooranampillai 92, our beloved emeritus principal of Hartley College, Point Pedro - 1943 - 1967 and St. Johns College, Jaffna -1967 - 1976. He passed away quietly at his residence in England, last Sunday. A towering, genteel fatherly figure is no more with us. Let his soul Rest in Peace.

Mr. Pooranampillai, affectionately called "K. P," was born in Thunnalai, those days, a rural village in the Vadamaradchy region. In Sri Lanka, I have seen Mr. Pooranapillai as the only principal who enjoyed the confidence, trust and regards of the entire Sri Lankan student community.

Right throughout my life, I have proudly declared that I am the student of K. P, who instilled in me true sense of knowledge, life and of the world. I had a long love-hate association with him. The last time I saw him was when I was the Manager of Lake House Jaffna in 1974.

One day, he quietly dropped into my cabin in my office, when I was surrounded by my friends, to name a few Late V. Dharmalingham, former Federal Party M.P. for Uduvil, Late T. Rajalingham, at that time a Circuit Education Officer, Udupiddy and later TULF MP for Udupiddy, Poet Laureate, R. Nagarajan, writer and editor of Mallikai, Dominic Jeeva and others.

He walked in, inquired about our health, and blessed us. Spoke few words in his genteel fashion and then excused himself. That was the last time I saw him.

Earlier during my days in Puloly, until 1960, it was a usual sight to see him at about 5 to 5.30 in the morning, walking pass our road (College Road) with his wife by his side and a walking stick in his hand. He will start from his house located in the College Road, opposite to the Thamarai Kulam, slowly and gently walking towards the junction of the road where my house was located, waving and smiling at those who passes by and inquiring about their welfare and walk pass Vinayaga Mudaliyar (V.M.) Road, Court Road and back to his house before six in the morning.

He had a gifted memory, would identify anyone, name them, would address them, and would ask about the concerned persons father, mother and brothers, almost all of them would have been his past students.

Mr. Pooranampillai served as the President of All Ceylon Principles' Union and the President of Cricket Association in Jaffna. He was also the vice-president of Ceylon Methodist Churches, while he was in Sri Lanka.

I can still remember, when he returned from Birmingham in 1951, after his successful completion of Diploma in Education. During that time, I was in studying in the Form 1 Lower sixth standard. He was my English teacher from Form 1 Lower to J.S.C eighth standard. He taught us to write in simple English words and he had a very beautiful handwriting. We all tried our best to follow his handwriting but in vain.

After his retirement as Principal of Hartley College, he joined St. Johns College in Jaffna. I was told that he had some initial teething problems at St. Johns, to come to terms with those students, but subsequently, he emerged as the reputed person in the city.

Mr. Pooranapillai, a beacon of light, was a strict disciplinarian and instills sense of duty, discipline and order, in the minds and hearts of his students. At Hartley College, Point Pedro, he was ably assisted by S.T. Samuel, the Vice-Principal and R.M. Gunaratnam the Deputy Principal.

Later I learnt that he left for England due to the unsettled political situation in Sri Lanka. He passed away in England.

Along with Thousands of his students and his well wishers, all of us miss him. A great soul who did yeomen service to humanity is no more with us. We all miss him, but we would continue to cherish those fond memories of our able guide and philosopher forever. R.I.P.

அன்பின் பரிசில்

யாழ் பிராந்திய திருச்சபைகள் வருடம்தோறும் வழங்கும் அன்பின் பரிசில்கள் இவ்வருடமும் கற்றல் உபகரணங்களாக வழங்கப்பட்டன. இவ் அன்பின் பரிசில்களை பிராந்திய செயற்குழுவின் பரிந்துரைக்கேற்ப

அளவெட்டித் திருச்சபையின் நற்செய்தி மையங்களான நாக்கனாவத்தை மற்றும் கலைநகர் ஆகிய இடங்களில் உள்ள பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு நற்செய்தி பணியாளர் திரு. என். தம்பிமுத்து அவர்களிடம் வழங்கப்பட்டு, அவரால் ஒளிவிழாவின்போது பிள்ளைகள் பெற்ற புள்ளிகளுக்கு உரிய முறையில் கையளிக்கப்பட்டது.

- யாழ் பிராந்தியம் -

குட்டீஸ் கொண்டாட்டம்

யாழ் பிராந்திய ஓய்வுநாட் பாடசாலை பிள்ளைகளுக்கான குட்டிஸ் கொண்டாட்டமானது 27.12.2023 புதன்கிழமை காலை 8:30 மணிக்கு காங்கேசன்துறை கத்தோலிக்க திருச்சபை வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்

பிராந்திய ஓய்வுநாட் பாடசாலைப் பிள்ளைகள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர். மேற்படி நிகழ்வினைச் சமயக்கல்வி குழுவின் இயக்குனர் அருட்பணி. எஸ். சுதாஜினி அவர்கள் தலைமை தாங்கி நடாத்தினார். விளையாட்டுகள் மற்றும் குழு நிகழ்வுகளை வாலிபப்பணியின் இணைப்பாளர் திரு. ஆர். சுஜந்தன் அவர்கள் நடத்தினார்கள். மாலைப் பொழுதில் பலாலி விமான நிலையம் பிள்ளைகளுக்கு காண்பிக்கப்பட்டு அங்கிருக்கும் உத்தியோகஸ்தர் களால் விமான நிலையம் குறித்த தகவல்கள் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

- யாழ் பிராந்தியம் -

மறுமைக்குள் பிரவேசம்

திருமதி கிரேஸ் புஷ்பமணி ஜெயசிங்கம்

(ஜெயசிங்கம் போதகரம்மா)

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டு, பின்னர் இறை பணிக்காகவும், ஆசிரிய பணிக்காகவும் பல்வேறு பணிக்களங்களில் வசித்துப் பணியாற்றி வந்த திருமதி. கிரேஸ் புஷ்பமணி ஜெயசிங்கம் அவர்கள் 30.01.2024 செவ்வாய்க் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அன்னாருடைய நல்லடக்க வழிபாடு 30.01.2024 மாலை 4.00 மணிக்கு அன்னாருடைய ஏழாலை வடக்குப் பெத்தானியா ஸ்டார் இல்லத்தில் அருட்பணியாளர்கள், போதகரம்மாமார், சபைமக்கள், உறவினர்கள், ஊர் மக்கள் சூழ்ந்திருக்க நடைபெற்றது. வழிபாட்டினை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் யாழ் பிராந்திய தலைவர் அருட்பணி. எம். டி. போல் சுரேஷ் அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார். அருட்பணியாளர்கள் ஜி. டி. மைனசீலன், ஜே. ஞானபிரகாசம், ஜே. அன்டனி சுதாகர், எஸ்.சுதாஜினி, ஏ. கமலகுமாரன் ஆகியோர் இணைந்து நடாத்தினார்கள்.

இரங்கலுரைகளை உறவின் முறையில் அருட்பணி. ரி. ஈ. அசோக்குமார் அவர்களும் சபைமக்கள் சார்பில் சாவகச்சேரியை திருச்சபையைச் சேர்ந்தவரும் இளைப்பாரிய ஆங்கில பாட சேவைக்கால ஆலோசகருமான திருமதி. அமிர்தி அவர்களும் பகிர்ந்து கொண்டனர். திருமறை பாடத்தினை திருமதி. ஸ்டெலா ஜோன் டக்ளஸ் அவர்கள் வாசிக்க, இறை செய்தியினை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் ஆதியாகமம் 50:24 மற்றும் பிலிப்பியர் 04:11 பகுதிகளிலிருந்து பகிர்ந்து கொண்டார்.

இரங்கலுரையாற்றியவர்கள் போதகரம்மா இயற்கையிலே பற்றுக் கொண்டவர், பிராணிகளிலே அன்பு கொண்டவர் என அவருடைய நற்குணங்களைக் குறிப்பிட்டிருந்தனர். இறைசெய்தியிலே தலைவர் போதகரம்மாவினுடைய இறை பற்றையும் அதன் நிமித்தமாக இறுதி நாட்களிலும் மரண பயமின்றி சந்தோசமாக வாழ்ந்தார் என்றும் குறிப்பிட்டார். கல்லறைத் தோட்ட வழிபாட்டினைச் சபைக்குரு அருட்பணி. ஏ. பி. தேவதாஸ் அவர்கள் அருட்பணி ரி. எச். வசந்தகுமார் அவர்களுடன் இணைந்து நடத்தினர். போதகரம்மாவினுடைய பூதவுடல் ஏழாலை வடக்கு கிறிஸ்து அரசர் கல்லறைத் தோட்டத்திலே நல்லடக்கம் செய்யப்பட்டது.

கவிக்களம்

போட்டி இல.01 இன் பரிசிலுக்குரிய கவிதை

ஆண்டவன் பிறந்த தேசமே குண்டு
மழையால் எரிந்தது - கோரத்
தாண்டவம் கண்டு இயற்கையே கண்ணீர்
மலையாய் சொரிந்தது
வேண்டாரின் கொடூரத்தால் உடமைகள் மட்டுமல்ல
உயிர்கள் பல மடிந்தது - இறைமகன்
மீண்டும் வந்தெமை மீட்பாரெனும் நம்பிக்கையிலவர்
பிறந்ததினம் விடிந்தது

விஞ்ஞான மேனுன்று வென்றாடுது உலகை
வேகத்திலே நின்று - அதுவே
மெஞ்ஞானம் என்று மேலானை மறந்து மனித
நேயத்தையே கொன்று
பொய்ஞானம் வளர்ந்து நானெனும் அகந்தையால்
யுத்தம் அனர்த்தம் என்று - மனிதன்
அஞ்ஞானம் நிறைந்த அரக்கனாய் உயிர்களை
அழிக்கிறான் இன்று

பாயும் கணைகண்டு பச்சிளம் பாலகர்
பாமரர் தெரியாது - எரியும்
தீயும் நல்மனம் நற்குணம் நல்லினம்
எனப்பார்த்து எரியாது
பூவும் பிஞ்சும் பொழியும் அழகும்
ஏவுகணை அறியாது - அதை
ஏவும் இரக்கமற்ற அரக்கன் மனதிற்கு
எதுவுமே புரியாது

வீட்டுக்கு வீடு விழும் குண்டுகளால் மக்கள்
வீதிக்கு ஓடுகின்றார் - அங்கு
வீதிகளும் சுவாலையாய் எரியும் நிலைகண்டு
ஒழிவிடம் தேடுகின்றார்
நாட்டுக்கு நாடுமோதும் வலுச்சண்டையால் மக்கள்
வாழ்விழுந்து வாடுகின்றனர் - அந்த
நாடுகளில் தலைமைகளோ தங்களுக்கு தாமே
புகழாரம் சூடுகின்றார்

டே. த. எட்வின் அரசரட்ணம்
உடுவில் திருச்சபை

02ஆம் இடம்

அக்கினி தலையில் ஓர் அற்புதக் குழந்தையாய்
அகிலத்தை மீட்க ஆற்றறிவாய் உருவெடுத்தார்....

மண்ணிலோ யுத்தம் பார்தேசங்கள் கரைகிறது
மக்களோ அழுகின்றனர் அக்கினிதுவல்களின் அதிகாரங்களில்....

உருவெடுத்தார் இறைவன் உலகத்தை மீட்க
உண்மை தனை பேச உனக்காக பாரில் பிறந்தார்....

மாந்தர் விடும் கண்ணீரோ மாறப்போவதில்லை உலகில்
யுத்தங்களும் சத்தங்களும் ஐயப்போவதில்லை விண்ணில்....

தருமதேவன்! தலைமகன்! விடுதலையின் நாயகன்!
அக்கினியாய் அபிசேகம் பெற்று அவனியில் பிறந்தார்....

உ. கலைப்பிரியன்
கிளிநொச்சி திருச்சபை

03ஆம் இடம்

அவர் தொழுவினிலே பிறந்தார் என்பது
தாழ்மையின் வரைபடம்
அவர் ஏழ்மையானதே எனக்காகத்தான் என்பதே
ஆறுதலின் புகலிடம்

வாய்மையே வெல்லும் என
வாக்கு கேட்டோம் அன்று
வாக்கே மனிதராய் மனவுருகொண்டு
அக்கினி ரூபமாய் பிறந்தது

விடுதலைக்கோர் குரல்
ஏங்கித்தவித்தது ஊர்
நீதிக்கென ஓர்க்குரல்
நீசர் இவ்வுலகில் பிறந்தார் என முழங்கி

சரித்திரமே தலை வணங்கும்
சத்திய தெய்வத்தின் சமாதான பிரபு
சர்வலோகத்தின் ஆளுமை என
சான்றாய் மண்ணில் உதித்தது.

கயல்விழி உதயகுமார்
கிளிநொச்சி திருச்சபை



போட்டி இல. 02

இப் புகைப்படத்தை கருவாய்க்கொண்டு எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை எழுதி அனுப்புங்கள். தரமான கவிதைகள் பிரசுரிக்கப்படும். சிறந்த ஓர் கவிதைக்கு பரிசில் வழங்கப்படும். நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

அனுப்பவேண்டிய முகவரி

கவிக்களம்
உதயதாரகை
ஆசியா இல்லம்,
மருதனார்மடம், சுன்னாகம்

மின்னஞ்சல் முகவரி

themorningstar1841@gmail.com

Whatsapp

0773 627 537

இறுதி திகதி 26-04-2024

தெல்லிப்பளை... (03ஆம் பக்க தொடர்ச்சி)

யுத்தம் மற்றும் இடப்பெயர்வு காரணமாக சிதறுண்டு போயின. 2012 வரையான காலப்பகுதியில் குண்டுத்தாக்குதல்களால் அழிவடைந்த இவ் ஆலயம் 2012இல் மக்கள் மீள இவ்விடங்களில் குடியமர அனுமதிக்கப்பட்ட வேளையில் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையினரால் மீளப்பெறப்பட்டது. பின்னர் இது தெல்லிப்பளை திருச்சபை மக்களாலே பூரணமான மீள் புனருத்தாரணம் செய்யப்பட்டு 12.03.2016 அன்று மீள்பிரதிஸ்டை செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் திகழ்கின்றது. அமெரிக்கன் மிஷன் தொண்டர்களால் தாபிக்கப்பட்ட பாடசாலைகளின் மூலமாகவும் ஆலயப் பணிகளின் வழியாகவும் பல கல்விமான்களும் ஆன்மீகத் தலைவர்களும் உருவாக்கப்பட்டனர்.- செல்வா எனப்படும் உயர்திரு. எஸ்.ஜே. செல்வநாயகம் போன்றோர் தெல்லிப்பழைத் திருச்சபையில் அமெரிக்கன் மிஷன் பாரம்பரியத்தில் உருவானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

சேவைத் திருப்பணி... (05ஆம் பக்க தொடர்ச்சி)

பாதுகாவலர்களுக்கு உரிய பயிற்சி பட்டறைகள் நடத்துவது போன்ற விடயங்கள் திட்டமிடப்பட்டது. மேலும் பின்வரும் தேவைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. மாணவர்களுக்கு உரிய முழு உடல் பரிசோதனை, தையல் மெஷின், மோட்டார் சைக்கிள், சீர்படுத்தபட்ட நீர்ப்பாசன வசதிகள், பிள்ளைகளுக்கான நூலகம், நோயாளர் ஓய்வு அறை, சமையலறை திருத்தவேலை, படுக்கை அறை ஜன்னல் திருத்தவேலை, பொழுதுபோக்கு கூடாரம் அமைத்தல், பிள்ளைகளுக்குரிய பாதுகாப்பு வேலி அமைத்தல் போன்றவை.

எமது இல்லத்துக்கு இங்கிலாந்திலிருந்து இவா, ஏவா, கிரேசி எனும் மூன்று தன்னார்வத் தொண்டர்கள் வருகை தந்துள்ளார்கள். இவர்கள் எமது இல்லத்தில் ஒரு மாத காலம் தங்கியிருப்பார்கள். இக்காலப்பகுதியில் இவர்கள் மாணவர்களுக்கான விளையாட்டுக்கள், ஆங்கில பாடங்களைக் கற்பித்தல், சித்திரம் வரைதல் போன்ற படிப்பினைகளை கற்றுக் கொடுப்பதற்காக எமது இல்லத்திற்கு வந்துள்ளார்கள்.

இறுதியில் நிர்வாகக் குழுவினர்கள் பிள்ளைகளைச் சந்தித்து அவர்களுடன் உணவு அருந்தி, அவர்களுடைய தேவைகளைக் கேட்டு உரையாடிச் சென்றனர்.

கிறிஸ்தவ சேவ ஆச்சிரமங்களின் இறைபணியாளன்

சாம் அண்ணனின் 25 வருட சிரார்த்த தின

நன்றி செலுத்தும் நற்கருணை வழிபாடு

மருதானர்மடம், யாழ்ப்பாணம்

சாம் அண்ணன் அருட்பணி சேவக் சாமுவேல் தேவரட்ணம் அல்பிரட் அவர்களின் வாழ்வுக்கும் இறைபணிக்கும் நன்றி செலுத்தும் நற்கருணை வழிபாடு 26.01.2024, வெள்ளி மாலை 4 மணிக்கு ஆச்சிரம இறைபணியாளன் அருட்பணி. ஜெரோம் அண்ணனுடைய தலைமையில் மருதானர்மடம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரம சிற்றாலயத்திலே நடைபெற்றது. சாம் அண்ணனுடைய கல்லறையிலே மலர் தூவி மெழுகுவர்த்திகள் ஏற்றிய நிகழ்வுடன் ஆரம்பமான வழிபாட்டினை அருட்பணியாளர்கள் A. B. தேவதாஸ், T. H. வசந்தகுமார், P. தேவமித்ரன், அருள்தந்தை ஜெராட் ஆகியோர் நடத்தினார்கள். சாம் அண்ணனின் வாழ்வை குறித்து சாட்சியத்தினை அருட்கலாநிதி. S. I. ஆனந்தராஜன் அவர்கள் பகிர்ந்து கொண்டார்.



கடவுள் இவ்வளவாய் அன்புகூர்ந்தார்

தூய நற்கருணை வழிபாட்டினை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. A. S. தேவகுணானந்தன் அவர்களும் தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாணப் பேராயத்தினுடைய பேராயர் பேரருட்கலாநிதி. V. S. பத்மதயாளன் அவர்களும் இலங்கை திருச்சபையினுடைய குருவானவரும் ஆச்சிரம பரிபாலன சபை செயலாளருமான ஞான காருண்யன் அவர்களும் ஆச்சிரம அண்ணன் ஜெரோம் அவர்களுடன் இணைந்து நடத்தினார்கள். திருமறைப்பாடங்கள் திருமதி. ஜோய்ஸ் மற்றும் அருட்பணி. றொக்சன் அவர்களால் வாசிக்கப்பட்டது. இறைசெய்தினைப் பேராயர் பேரருட்கலாநிதி. V. S. பத்மதயாளன் அவர்கள் பகிர்ந்து கொண்டார். வழிபாட்டின் நிறைவில் அனைவருக்கும் ஐக்கிய தேநீர் விருந்திலே கலந்து கொண்டனர்.

கிரான், மட்டக்களப்பு

கடந்த 2024-01-25ஆம் திகதி அன்று காலை 10.00 மணிக்கு எமது அன்பான சாம் அண்ணன் அருட்பணி. சேவக். சாமுவேல் தேவரத்தினம் அல்பிரட் அவர்களின் வாழ்வுக்கும் பணிக்கும் கடவுளுக்கு நன்றி கூரும் 25ஆவது ஆண்டு நற்கருணை வழிபாடு கிரான் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

இவ்வழிபாட்டில் இறைசெய்தியை கல்முனை மெதடித்த திரு அவையின் முகாமைக் குரு அருட்பணி. ரவி முருகுப்பிள்ளை அவர்களும் நினைவுரையை கிரானைச் சேர்ந்த ஆசிரியை திருமதி. றீற்றா நிர்மலா ஜெயக்குமார் அவர்களும் பகிர்ந்து கொண்டார்கள்.

அருட்பணியாளர் ஒன்றிய கூட்டமும் ஞான ஒடுக்கமும்

கடந்த 12-02-2024, திங்கட்கிழமை காலை 08:30 மணிக்கு அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் அருட்பணியாளர் ஒன்றிய கூட்டம் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆரம்ப வழிபாட்டினை நவாலி திருச்சபையின் அருட்பணியாளர் அருட்பணி. ஜே. அன்டனி சுதாகர் நடத்தினார். அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் ஓசியா புத்தகத்திலிருந்து **“திரும்புதல்”** எனும் பொருளில் திருமறைப் படிப்பினை நடத்தினார். அதனைத் தொடர்ந்து அருட்பணியாளர் ஒன்றியக் கூட்டம் நடைபெற்றது.

13.02.2024 செவ்வாய்க்கிழமை காலை 08:30 மணிக்கு மருதனார்மடம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தில் அருட்பணியாளர்களுக்கான ஞான ஒடுக்கம் நடைபெற்றது. தபசு நாட்களை முன்னிட்டு நடைபெற்ற இந்த ஞான ஒடுக்கத்தினை கத்தோலிக்க திருச்சபையின் அருட்தந்தை டேவிட் அவர்கள் சிறப்பாக நடத்தினார். பாப்பரசர் பிரான்சிஸ் அவருடைய சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு **“கொல்லும் கொடிய நோய்கள் 15”** என்னும் தலைப்பில் இந்த ஞான ஒழுக்கம் நடைபெற்றது. இவ்விரண்டு நிகழ்வுகளிலும் எல்லா பிராந்தியங்களிலும் இருந்து பெரும்பான்மையான குருமார் கலந்து கொண்டார்கள்.

அருட்பொழிவு... (01ஆம் பக்க தொடர்ச்சி)

மேற்கு வங்காளத்தில் உள்ள செரம்பூர் இறையியல் கல்லூரி, பிலிப்பைன்ஸ் ஐக்கிய இறையியல் கல்லூரி என்பவைகளில் கற்று அரங்கேறியவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அருட்பணியாளர்களுடைய பவனியுடன் ஆலயத்துக்குள் பிரவேசித்த பின் ஆரம்பமான இந்த திருவருட்பொழிவு வழிபாட்டினை திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் திருச்சபையின் செயலாளர் அருட்பணி. ஏ. பி. தேவதாஸ் அவர் களுடைய துணையுடன் நடாத்தினார். இவ் வழிபாட்டில் சபைக்குரு அருட்பணி ரி. ஈ. அசோக்குமார், முன்னாள் தலைவர் அருட்பணி. ரி. தேவநேசன், முன்னாள் செயலாளர் அருட்பணி. ஜே. அன்டனி சுதாகர், இறையியல் கல்லூரியின் அதிபர் அருட்பணி. ஏ. கமலகுமாரன், பிராந்திய குருமுதல்வர்களான அருட்பணி. எம். டி. போல் சுரேஷ் மற்றும் அருட்பணி. எம். லூக் ஜோன் ஆகியோர் அபிஷேகம் பெறுபவர்களை முன் நிறுத்தினர். இறை செய்தியினைத் திருச்சபையின் தலைவர் பகிர்ந்து கொண்டார்.

இவ் வழிபாட்டில் ஆவியானவரின் பிரசன்னத்தை வேண்டி கிறிஸ்தவ இறையியற் கல்லூரி மாணவர்களால் விசேட பாடல் பாடப்பட்டது. இவ் வழிபாட்டிற்கான ஆயத்தப் பணிகளை யாழ் பிராந்திய குருமுதல்வர் அருட்பணி. எம். டி. போல் சுரேஷ் அவர்கள் அருட்பணி. ஜே. ஞானபிரகாசம் அவர்களுடன் இணைந்து முன்னெடுத்தார். இவ் வழிபாட்டிற்கு நாட்டின் பல பிரதேசங்களில் இருந்தும் சுமார் நானூற்றும் மேற்பட்ட விசுவாசிகள் கலந்து வழிபாட்டினை சிறப்பிதனர். அது மட்டுமன்றி அருட்பொழிவு பெற்ற அருட்பணியாளருக்கு வாழ்த்துக்கள் தெரிவித்ததுடன் மாலைகள் அணிவித்தும் நினைவு பரிசிலில் வழங்கியும் தங்கள் அன்பை வெளிப்படுத்தினர். கர்த்தர் அழைத்த இறைபணிக்கு உடன் பங்காளிகளாக இருக்க அருட்பொழிவு பெற்றவர்களுக்கு உதயதாராகையின் வாழ்த்துக்கள்.

தவக்கால வாலிபர் ஒன்றுகூடல் – யாழ்

தவக்காலம் மற்றும் சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு யாழ் பிராந்திய வாலிபருக்கான ஒன்றுகூடல் 10.03.2024 அன்று அளவெட்டித் திருச்சபையில் பிராந்திய வாலிபர்பணி இணைப்பாளர் திரு. ஆர். சுஜந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மேற்படி நிகழ்வில் துதி ஜெபத்தினை செல்வி. பி. சொபியா அவர்கள் வாலிபர்களுடன் இணைந்து முன்னெடுத்தார். இதனைத் தொடர்ந்து பெண்களின் மாண்பு எனும் தலைப்பில் திருமறைப் படிப்பினை அருட்பணி. எம். ஜெயானந்தராஜா அவர்கள் முன்னெடுத்தார். மதிய ஐக்கிய உணவின் பின்னர் சட்டதரணி செல்வி. இந்துகா அவர்களால் இலங்கையின் அடிப்படை சட்டங்கள் குறித்து வாலிபர்களுடன் கருத்தமர்வு ஒன்றினை முன்னெடுத்தார். நிகழ்வில் கலந்துகொண்ட அனைத்து வாலிபர்களுக்கும் மதிய ஐக்கிய உணவு மற்றும் தேனீர், சிற்றூண்டிகளை அளவெட்டி திருச்சபை தனது அங்கத்தவர்களின் உதவிகளுடன் வழங்கப்பட்டது. மேலும் நிகழ்வுக்கு வருகைதந்த அனைத்து பெண்களுக்கும் நினைவுப் பரிசில் வழங்கப்பட்டது. இவ்வொன்றுகூடலில் அநேக புதிய வாலிபர் வருகைதந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமறையின் வரலாற்றில் இடம் பிடித்த பெண்கள்

சிபில் தேவகி ஞானபிரகாசம்

யோபுவினுடைய மனைவி

பெயர் தெரியாத பெண்களுடைய வரிசையில் யோபுவினுடைய மனைவியும் இடம்பெறுகின்றாள். திருமறையில் இவளுடைய பெயர் எங்கும் குறிப்பிடப்படவில்லை. பண்புகளை அடிப்படையாகக் கொண்டு மனைவியைரை இரண்டு வகையாக பிரிக்கலாம். நல்ல மனைவியரை இலட்சணமான மனைவியர் என்றும் துர்க்குணமுள்ள மனைவியரை அவலட்சணமான மனைவியார் என்றும் வகைப்படுத்தலாம். யோபுவினுடைய மனைவி அவலட்சணமான மனைவியருக்கு எடுத்துக்காட்டானவள். அவள் பேசிய வார்த்தைகள் யோபுவைப் புண்படுத்தின.



மனிதன் தனிமையாக இருப்பது நல்லதல்ல என்று கடவுள் அவனுக்குத் துணையாகப் பெண்ணைப் படைத்தார். இருவரும் வாழ்க்கையின் எல்லா நிலைபரங்களிலும் ஒருவருக்கொருவர் துணையாக இருக்க வேண்டுமென்பதே கடவுளுடைய விருப்பம். யோபுவினுடைய விசுவாச வாழ்க்கையில் அவன் பல்வேறு சோதனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. யோபு கடவுளைப் பின்பற்றுகின்ற பற்றுதலிலே மிகவும் உறுதியாக நின்றான். இப்படியான சூழலில் அவன் பல்வேறு துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது. இக்காலங்களில் தன்னுடைய கணவனுக்கு உறுதுணையாக இருக்கவேண்டிய மனைவி, உதவி எவற்றையும் செய்யாது, கணவன் மனம் நோகக்கூடிய வகையில் கடினமான வார்த்தைகளைப் பேசினாள்.

யோபுவுடன் வாழ்ந்த காலத்தில் யோபுவின் மனைவி, யோபுவுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தாள். இவர்களுக்கு ஏழு ஆண் பிள்ளைகளும் மூன்று பெண் பிள்ளைகளும் பிறந்தனர். யோபுவுக்கு 7000 ஆடுகளும் 3000 ஒட்டகங்களும் 500 ஏர்மாடுகளும் 500 கழுதைகளும் இருந்தன. இவைகளைப் பராமரிப்பதற்காகத் திரளான பணிவிடைக்காரர்களும் இருந்தனர். யோபு நல்ல பல பண்புகளைக் கொண்டவனாகவும், பக்தி வைராக்கியம் கொண்ட சிறந்த மனிதராகவும் திகழ்ந்தான். கடவுளும் அவனைக் குறித்து சாட்சி கொடுத்தபோது **“யோபு உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாங்குக்கு விலகுகிறவனுமாகிய இவனைப் போல பூமியில் ஒருவனும் இல்லையே”** என்று கூறியுள்ளார். இவ்வாறு கடவுளுடைய சாட்சியைப் பெற்றுக்கொண்ட ஒரு மிகச்சிறந்த மனிதனுடைய மனைவியே இவள். (யோபு 01:08)

பாடுகள், துன்பங்கள் நேரிடும் வேளையிலேயே ஒரு மனிதனுடைய உண்மையான மனநிலை வெளிப்படுகின்றது. யோபு துன்பங்கள், இழப்புக்கள் ஏற்பட்டபோதிலும் கடவுளிடம் மிகுந்த விசுவாசமுள்ளவனாகவும், உண்மையுள்ளவனாகவும் விளங்கினான். ஆனால் யோபுவினுடைய மனைவியோ தன்னுடைய உண்மையான சுபாவத்தைக் காண்பித்தாள். யோபுவின் மனைவியினால் ஆசீர்வாதமான காலங்களில் சந்தோசமாக இருக்க முடிந்தது. ஆனால் துன்பங்கள் இழப்புகள் ஏற்பட்டபோது, அதனை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தான் ஆராதித்து வந்த கடவுளையே அவள் தூற்றுகிறாள். அத்துடன் தன்னுடைய கணவனையும் தூசித்து உயிரை விடும்படி கூறுகிறாள்.

யோபுவுக்கு ஒருபுறம் தன்னுடைய உடலின் வேதனை; உடலிலே கொடிய பருக்கள்; பெரிய புண்கள்; நித்திரையில்லாதபடி உள்ளத்திலே இரவும் பகலும் இனம்புரியாத கலக்கம்; மரண பயம். மறுபுறம் மனைவியின் கடுமையான வார்த்தைகள் அவனது உள்ளத்தைக் கலங்கப் பண்ணிக் கொண்டிருந்தன. இவ்வளவு துன்பங்களுக்கு மத்தியிலும் யோபு தன்னுடைய உத்தமத்திலேயிருந்து எள்வளவும் விலகவில்லை; பின்வாங்கவும் இல்லை. தன்னுடைய பிள்ளைகளை இழந்தபோதும் **“கர்த்தர் கொடுத்தார்; கர்த்தர் எடுத்தார்”** என்று கூறினார். (யோபு 01:21)

இவ்வாறான சூழ்நிலைகள் எல்லாவற்றையும் அவன் கடந்து சென்ற போதும் அவன் பாவம் செய்யவில்லை கடவுளைக் குறித்து குறைகூறவுமில்லை. (யோபு 01:21,22) **“உம்முடைய கடவுளை தூசித்து உயிரைவிடும்”** என்று கூறிய தன்னுடைய மனைவிக்கு **“நீ பைத்தியக்காரி பேசுவது போலப் பேசுகிறாய்; கடவுளுடைய கையில் இருந்து நன்மைகளைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ”** என்று கூறினான்.

இப்பத்திரிகையானது ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள றூபன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு,
15.03.2024 திகதி அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையினாரால் வெளியிடப்பட்டது.